
8

## ஆய்வுப்பொருள்: ஒன்று:- உலகில் வெளிப்படும் இறைச் செயற்பாடு

## 1.8. நமது நாட்டின் ஆன்மீகத்தைப் பேணுவோம்





- இவர்கள் யார் என உமக்குத் தெரியுமா?
- இவர்களில் எம் நாட்டைச் சேர்ந்தவர்கள் யார்?
- இவர்களில் எம் நாட்டில் கத்தோலிக்கருக்காகப் பணியாற்றியவர்கள் யார்?
- இவர்கள் எதற்காக வாழ்ந்தார்கள்?



இலவச விநியோகத்திற்காக

1505 கார்த்திகை 15ல் வர்த்தக நோக்கமாக இலங்கைக்கு வருகைதந்த போர்த்துக்கேயர், படிப்படியாகப் பரப்பினர்.

**போர்த்துக்கேய மறைத்தூதுப்பணி நம் நாட்டில் வெற்றியடைந்ததற்கான காரணிகள்:**

- போர்த்துக்கேய மறைப் பணியாளர் இலங்கை மக்களோடு மிகவும் ஐக்கியமாக இருந்தனர்.
- நம் நாட்டு மொழிகளைக் கற்றுப் போதித்தனர்.
- கரையோரப் பகுதிகளில் தம் பணியை ஆரம்பித்தனர்.
- எல்லோரையும் சமமாக நடாத்தினர்.
- எளிமையாக வாழ்ந்தனர்.

1638ல் மட்டக்களப்பைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டினர். பின்னர் கத்தோலிக்க மதத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர்கள் அனுபவித்த சவால்கள்:**

- ஒளிந்திருந்த கத்தோலிக்க குருக்கள் கண்டுபிடிக்கப்படும்பொழுது அவர்களுக்கு மரண தண்டனை வழங்கியமை.
- மறைப் பணியாளர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டமை.
- கத்தோலிக்கர்களின் சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டமை.
- ஒல்லாந்தர்களின் பாடசாலைகளில் கத்தோலிக்க சமயம் கற்பித்தல் தடைசெய்யப்பட்டதுடன் அதற்குப் பதிலாக அவர்களுக்குச் சீர்திருத்தச் சபையின் சமயம் கற்பிக்கப்பட்டமை.
- சீர்திருத்தச் சபையில் திருமுழுக்குப் பெறாதோருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க மறுத்தமை.



இலவச விநியோகத்திற்காக

இலங்கையில் அழிந்துகொண்டிருந்த கத்தோலிக்க மறையை மீண்டும் உயிர்பெறச் செய்வதற்காக ஒறத்தோறியன் சபையை (தியான சம்பிரதாயக் குருக்களை) இறைவன் தெரிந்தெடுத்தார். இந்தியாவின் கோவா நகரைச் சேர்ந்தவரும், பின்னர் இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டவருமான முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளார் இக்கடமையைப் பொறுப்பேற்றார். மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தமது பணியை ஆற்றிய அடிகளார் 1696ம் ஆண்டில் யோசப் மெனெசஸ், யோசப் றவல்லோ எனும் குருக்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டார். அதன்பின்னர், இலங்கையில் கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படும் யாக்கோமே கொன்சால்வேஸ், மனுவல் த மிரண்டா, மிகேல் த மெல்லோ எனும் ஒறட்டோறியன் குருக்களும் இணைந்து கொண்டனர்.


இவர்கள் கத்தோலிக்க மதம் இலங்கையின் சூழலுக்கு இயைவுபடும் விதத்தில் தேசிய மயமாகி உயர்வடைய காரணகர்த்தாக்களாக உழைத்தனர். விசுவாசத்தை வளர்த்தனர். எமது மக்களும் விசுவாசத்தில் உறுதி பெற்றனர். கிறிஸ்துவின் நற்செய்திக்காக தம் உயிரையும் தந்தனர்.

1544ம் ஆண்டு மன்னாரில் சிந்தப்பட்ட 600க்கும் மேற்பட்ட மறைசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்தாகியது. இலங்கையில் பணியாற்றிய மறைத்தூதுவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் வாழ்ந்தார்கள்.

மறைத்தூதுவர்கள் எம் நாட்டின் கலாசாரக் கருவூலங்களையும் பேணி வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர். கலாசாரத்தின் வழி விசுவாசமும் விசுவாசத்தின் வழி கலாசாரமும் போற்றி வளர்க்கப்பட்டன.

கடவுள் இயேசுவில் மனுவுரு எடுத்து நம் நாட்டில் எம்மைத் தேடி வருகின்றார். அழகிய எமது கலாசாரமானது எம் ஆன்மாக்களை இறைவன்பால் எழுப்ப உறுதுணையாக உள்ளது. நாம் விழிப்பாக இருந்து இந்த செயற்பாட்டை அடையாளம் காண்போம்.

**எம் ஆசிய மண்ணே உலக மறைகளின் தொட்டிலாகி சிறப்புப் பெறுகிறது.**






இலவச விநியோகத்திற்காக


- சுவாமி ஞானப்பிரகாசர்
- முத். யோசப் வாஸ்
- ...........................................
- ...........................................
- ...........................................

- இலங்கைத் திருச்சபையின் விசுவாசக் கருவூலங்களை பண்பாட்டுமயமாக்க உரமூட்டியவர்களின் பெயர்களை மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலில் நிறைவு செய்க.
- யேசு போதித்த பண்புகளை எம் சகோதர மதங்களும் போதிக்கின்றனவா என சிந்தித்துப்பார்க்கவும். பின்வரும் பட்டியலை பூர்த்தி செய்யவும்.

- அன்பு.
- கருணை.
- புலனடக்கம்.
- பகிர்வு.
- ---------------
- ---------------
- ---------------
- ---------------

பிற மதங்களை மதிப்பதும் நல்லிணக்கத்துடன் நோக்குவதும் ஒரு கிறிஸ்தவனின் நல்ல பண்பாகும்.

பிற மதங்களின் வழிபாட்டு முறைகள், சடங்காசாரங்கள் மத்தியில் வாழும் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. எம் கிறிஸ்தவ தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ள விழிப்பாயிருந்து, விவேகத்தோடு செயலாற்ற வேண்டும். அதே நேரத்தில் விசுவாச வெளிப்பாடு என்ற பெயரில் கிறிஸ்துவின் போதனைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நாம் அனுமதிக்க முடியாது.




இவை போன்ற ஏனைய செயற்பாடுகளால் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, எமது ஆன்மீக வாழ்வைக் கட்டியெழுப்புவோமாக.

**கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிரூட்டிய சபைகள்:**

- பிரான்சிஸ்கன் சபை
- இயேசு சபை
- டொமினிக்கன் சபை
- அகுஸ்தீன் சபை
- ஒறத்தோறியன் மறைபரப்பாளர்
- அமலமரித் தியாகிகள் சபை
- டிலாசால் அருட்சகோதரர்கள்

மறைபரப்பு சபைகளின் பணிகளால் இலங்கை திருச்சபை வளமடைந்துள்ளது, வளமடைகிறது.

**மேற்குறிப்பிட்ட மறைத்தூதுப் பணியாளர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி இலங்கையிலும் சுதேச துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவையாவன:**

- ✡ புனித தூதர் கன்னியர் சபை
- ✡ செபமாலைத் தாசர் துறவற சபை - குருக்கள், கன்னியர்கள்.
- ✡ சுதேச பொதுநிலை சபையினர்

**சிந்திக்கவும்:**

❒ **நீர் பேறு பெற்றவரா?**

● **விடையளிக்கவும்**

1. எமது கலாசாரம் கற்றுத்தருகின்ற தந்தை, தாய் குருவைப் பேணுதல், தான தருமங்கள் செய்தல் ஆகியவை கிறிஸ்தவ விழுமியங்கள். இவைபோன்ற மேலதிக விழுமியங்களை பெயரிடுக.
2. இலங்கைத் திருச்சபையை பண்பாட்டு மயமாக்குவதற்கு முன்வைக்கக்கூடிய நான்கு செயல்முறைகளைக் குறிப்பிடுக.